**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 21 of 2020**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தங்கவேல் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.16.04.2026**

**முதல் விசாரணை**

நான் நாமக்கல் மாவட்டம், வள்ளியப்பூம்பட்டி புதுத்தெருவில் வசித்து வந்து ட்ரெய்லர் லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன மகேந்திரன் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 28.06.2019 ம் தேதி திருச்சி–டால்மியாபுரம் சிமெண்ட் கம்பெனிக்கு சிமெண்ட் ஏற்றுவதற்காக TN 88 D 5493 என்ற பதிவெண் உடைய ட்ரெய்லர் லாரியை எடுத்துக் கொண்டு திருச்சி–சிதம்பரம் செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையின் இடது ஓரமாக செல்லும் போது மதியம் 03.30 மணியளவில் இடக்கிமங்கலம் போஸ்ட் ஆபீஸ் அருகில் சென்றபோது, எனக்கு பின்னால் அதே திசையில் வந்த பதிவெண் இல்லாத XL 100 இருசக்கர வாகனமானது பின்னால் ஒருவரை ஏற்றிக் கொண்டு அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து எனது லாரிக்கு வலதுபுறமாக ஏறி சென்று வேகத்தடைக்கு அருகில் பிரேக் போட்டதால் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து இருந்தவர்

எனது லாரியின் சென்டர் ஆக்சில் விழுந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அதன்பிறகு இலால்குடி காவல் நிலையம் சென்று வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு கொடுத்தேன். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். ஆஜர் எதிரி தான் சம்பவ தினத்தன்று விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் ஆவார். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

புகார் யாரால் எழுதப்பட்டது என்றால் நான் சொன்னேன், போலீசார் எழுதி கொண்டனர். புகாரில் என்ன எழுதியிருந்தது என படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எனது லாரிக்கு வலதுபுறத்தில் இருசக்கர வாகனம் வந்தது என்றால் சரிதான். எனது லாரிக்கும், இருசக்கர வாகனத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 3 அடி தூரம் இருக்கும். பொதுவாக ஒரு வாகனம் வேகத்தடை அருகே வரும் போது பிரேக் போடுவது வழக்கம் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன நபருக்கு நான் ஓட்டி சென்ற லாரியின் டயர் ஏறி இறங்கியதால் ஏற்பட்டதா என்றால் இல்லை. அவர் இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்ததினால் ஏற்பட்டது. இந்த விபத்திற்கும், நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கும், நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லாத நிலையில் நான் ஏன் புகார் கொடுக்க சென்றேன் என்றால் எனது வாகனத்திற்கு அருகே விபத்து ஏற்பட்டதனாலும் எனது வாகனத்தின் மீதும், என் மீதும் பொய்யான புகார் கொடுக்கக்கூடாது என்பதற்காகவும்

நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் இருசக்கர வாகனத்தை விபத்து நடந்தபோது பார்த்தேனா அல்லது அதற்கு முன்னரே பார்த்தேனா என்றால் விபத்து நடப்பதற்கு முன்னரே பார்த்தேன். விபத்து நடந்தபோதும் பார்த்தேன். சம்பவ இடத்திற்கு போலீசார் எப்போது வந்தார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் ஓட்டி சென்ற லாரியின் சக்கரம் இறந்துபோனவர் மீது ஏறி இறங்கியதை காவல் துறையினர் போட்டோ எடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் எனக்கு முன்னால் எதிரி ஒட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது நான் ஓட்டிச் சென்ற லாரியை மோதியது தான் என்றால் சரியல்ல. சம்பவ நாள் அன்று நான் எத்தனை மணிக்கு திருச்சியிலிருந்து கிளம்பினேன் என்றால் மதியம் 02.45 மணிக்கு கிளம்பினேன். விபத்து வேகத்தடையிலிருந்து எவ்வளவு தூரத்தில் நடைபெற்றது என்றால் வேகத்தடையிலே நடைபெற்றது. நான் கொடுத்த புகாரில் வேகத்தடையில் தான் நடைபெற்றது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எனது புகாரிலும், போலீசார் விசாரணையிலும் விபத்து வேகத்தடைக்கு முன்பு நடந்தது என சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன நபரின் பெயர் மற்றும் எதிரியின் பெயர் எனக்கு எப்படி தெரியும் என்றால் போலீசார் சொல்லி தெரிந்து கொண்டேன். போலீசார் எனக்கு எப்போது மேற்சொன்ன விவரங்களை என்னிடம் சொன்னார்கள் என்றால் சம்பவ தினத்தன்று இரவு 9– 10 மணிக்கு சொன்னார்கள். சம்பவத்தின் போது நான் ஓட்டிச் சென்ற லாரிக்கு வலதுபுறத்திலோ, இடதுபுறத்திலோ எதிரி ஒட்டி வந்த இருசக்கர வாகனத்தை தவிர வேறு வாகனங்கள் வந்ததா என்றால் இல்லை. சம்பவத்தின் போது நான் ஓட்டிச் சென்ற லாரிக்கு

வலதுபுறத்திலோ, இடதுபுறத்திலோ எதிரியையும், இறந்துபோன நபரையும் தவிர வேறு நபர்கள் இல்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. இறந்துபோன நபரின் குடும்பத்தார் திருச்சி நீதிமன்றத்தில் நான் ஓட்டிச் சென்ற லாரிக்கு போடப்பட்டிருந்த காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் நஷ்ட ஈடு கேட்டு அதைப் பெற்றுக் கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன விவரம் எனக்கு தெரியும் என்றாலும், நான் ஓட்டிச் சென்ற லாரி தான் விபத்திற்கு காரணம் என இறந்துபோன நபரின் குடும்பத்தார் நஷ்ட ஈடு பெற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் நான் ஓட்டி சென்ற லாரியை அதிவேகமாகவும், கவனக்குறைாவகவும் ஓட்டி எதிரி ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதே ஆகும் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் நான் கைது செய்யப்படுவேன் என்ற பயத்தினால் எதிரி மீது ஒரு பொய்யான புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த விபத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/−சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.04.16 15:08:22 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி